**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075260
C

1. District : மாவட்டம் VELLORE. PS: காவல்நிலையம் VIGILANCE & ANTI – CORRUPTION, VELLORE Year: ஆண்டு 2020. FIR No.: மு.த.அ. எண் 23/2020 Date: நாள் 30.12.2020.

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்: 7(a) of P.C.
(ii) Act சட்டம்: (AMENDMENT) ACT 2018. Sections பிரிவுகள்: (Amendment) Act 2018.
(iii) Act சட்டம்: CRIMINAL PROCEDURE CODE. Sections பிரிவுகள்: r/w 102 Cr.P.C.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 29.12.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 14.30 hrs Time to : நேரம் வரை 17.20 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.12.2020 Time : நேரம் 14.45 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-II 2020. Time : நேரம் 29.12.2020. 14.45 hrs 30.12.2020. 04.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL TYPED COMPLAINT.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் NORTH WEST DIRECTION – 1 KMs.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி OFFICE OF THE JOINT COMMISSIONER, (INTELLIGENCE) STATE TAX OFFICE, VELLORE DIVISION, VELLORE
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : — இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. JOTHI (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் SAMPATH
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965. (d) Nationality : நாட்டினம் INDIAN. (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Dy. Inspection cell officer, Vellore (g) Address : முகவரி OFFICE OF THE DISTRICT INSPECTION CELL OFFICER, VELLORE COLLECTORATE, VELLORE DISTRICT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tmt. B. VIMALA (42/2020) w/o PUSHKINRAJ, JOINT COMMISSIONER (INTELLIGENCE), STATE TAX OFFICE, FULL ADDITIONAL CHARGE, JOINT COMMISSIONER, STATE TAX OFFICE, VELLORE DIVISION, VELLORE.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
"NO-DELAY"

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 30/12/2020
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 30.12.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 05.00 hrs.

Name: பெயர் K.S. HEMACHITHRA.
Rank: நிலை DY. SUPDT. No. எண் OF POLICE, VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**SUBMITTED:**

இன்று 30.12.2020-ஆம் தேதி காலை 04.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் பின்வருமாறு: அனுப்புநர், S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர். பெறுநர், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், வேலூர் மாவட்டம், வேலூர் கோட்ட இணை ஆணையர், மாநில வரி, அலுவலகத்தில் இணை ஆணையராக பணி புரிந்து வரும் திருமதி.B.விமலா அவர்கள் தனக்கு கீழ் பணிபுரியும் வேலூர் கோட்டத்திற்கு உட்பட்ட வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த மாநில வரி துறையில் பணி புரியும் துணை ஆணையர், உதவி ஆணையர்கள், மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை மாநில வரி அலுவலர்கள் ஆகியோர்களிடமிருந்து QRMP of Taxes Scheme சம்மந்தமான பயிற்சி முடிந்த பிறகு மேற்படி அலுவலர்கள் மற்றும் தனிநபர்களான ஆடிட்டர்கள் மற்றும் அவர்களை சார்ந்த நபர்களிடமிருந்து எதிர் வரும் 2021 ஆங்கில புத்தாண்டு முன்னிட்டு ஆயிரக் கணக்கில் பண பரிசினை லஞ்சமாக பெற உள்ளதாக எனக்கு 29.12.2020-ஆம் தேதி 14.30 மணிக்கு கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலை என்னுடைய தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு தகவல் தெரிவித்து பின் 29.12.2020-ம் தேதி 17.20 மணியளவில் நான் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் குழுவினருடன், இணை ஆணையர் (நுண்ணறிவு) மாநில வரி, வேலூர் கோட்டம் மற்றும் கூடுதல் முழு பொறுப்பு இணை ஆணையர், மாநில வரி, வேலூர் கோட்டம் அலுவலகத்தில் இருதுறை கூட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது வேலூர் கோட்டை சுற்று சாலையில் கிழக்கு மேற்காக அமைந்த சாலையில் வடக்கு நோக்கி சுற்றுச்சுவருடன் கூடிய தனி அலுவலகமாக அமைந்துள்ளது. இணை ஆணையர், மாநில வரி அலுவலகத்தின் அறைக்குள் சென்று அலுவலகத்தில் ஆஜரில் இருந்த இணை ஆணையர் திருமதி.விமலா மற்றும் மற்ற அலுவலர்களிடமும் இருதுறை சோதனைக்குழுவினரை அறிமுகப்படுத்திக் கொண்டு விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.B.விமலா என்றும் இணை ஆணையர், நுண்ணறிவு, மாநில வரி வேலூர் கோட்டத்தில் கடந்த 02.08.2019 முதல் பணிபுரிந்து வருவதாகவும், தனது சொந்த ஊர் கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிபட்டினம் என்றும் தற்போது தன்னுடைய கணவர் மற்றும் குழந்தையுடன் எண்:1/24, வினோபாஜி தெரு, வேதாசலம் நகர், செவிலிமேடு, (இந்திரா திரையரங்கம் அருகில்) காஞ்சிபுரம்-1, காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாக தெரிவித்தார். இருதுறை திடீர்சோதனை குழுவினர் தங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து, இருதுறை திடீர் சோதனை ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி இணை ஆணையர் அலுவலக அறையின் உள்ளேயும், அறையின் வெளியே கதவின் அருகிலும் மற்றும்

மேற்படி அறைக்கு முன்பாக இருந்த Steno Typist அறையின் உள்ளேயும் அலுவலர்கள்/தனி நபர்கள் நின்று கொண்டு இருந்தனர். அவர்களை யார் என்று திருமதி.விமலா இணை ஆணையர் அவர்களிடம் கேட்க அவர்கள் இன்று நடைபெற்ற QRMP பயிற்சியில் கலந்து கொண்ட வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த உதவி ஆணையர்கள், மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை மாநில வரி அலுவலர்கள் என்று தெரிவித்தார். மேற்படி நபர்களை அவரவர்கள் இருந்த இடத்திலேயே இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், திருமதி.B.விமலா, இணை ஆணையர், மாநில வரி வேலூர் கோட்டம் அவர்களின் அலுவலக அறையில் அவர் முன்பாக போடப்பட்டிருந்த மேஜையின் மீது ஆப்பில் பழங்கள், முந்திரி, திராட்சை, இனிப்பு வகைகள், கேக் பாக்ஸ்கள், டர்க்கி டவல்கள் மற்றும் சால்வைகள் வைக்கப்பட்டிருந்தது. மேற்படி மேஜையின் வலது பக்கம் சுமார் 8 கைப்பைகளில் பழவகைகள், திராட்சை மற்றும் முந்திரி ஆகியவை இருந்தன. மேற்கண்ட பரிசு பொருட்கள் குறித்தும், பழவகைகள், முந்திரி, திராட்சை, இனிப்பு வகைகள், 2021 டைரி, டர்க்கி டவல்கள் மற்றும் சால்வை ஆகியவை குறித்து திருமதி.விமலா அவர்களிடம் கேட்க எதிர் வரும் 2021 புத்தாண்டு முன்னிட்டு QRMP of Taxes Scheme சம்மந்தமான பயிற்சிக்கு வந்த உதவி ஆணையர்கள், மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை மாநில வரி அலுவலர்கள் மரியாதை நிமித்தம் தன்னை சந்தித்து மேற்கண்ட பரிசு பொருட்களை கொடுத்ததாக தெரிவித்தார். அவற்றை பார்வை செய்ய (1) Pink Colour Plastic Basket –ல் பாதாம், முந்திரி, பிஸ்தா, திராட்சை, ஆப்பிள் மற்றும் மாதுளை என சுமார் 5 கிலோவும், (2) Red Colour Plastic Basket – பாதாம், முந்திரி, பிஸ்தா, திராட்சை, ஆப்பிள் மற்றும் மாதுளை என சுமார் 5 கிலோவும், (3) Green Colour Plastic Basket – பாதாம், முந்திரி, பிஸ்தா, திராட்சை, ஆப்பிள் மற்றும் மாதுளை என சுமார் 5 கிலோவும், (4) Blue Colour Plastic Basket – பாதாம், முந்திரி, பிஸ்தா, திராட்சை, ஆப்பிள் மற்றும் மாதுளை என சுமார் 5 கிலோவும், (5) இரண்டு பாம்பே ஆனந்த பவன் வெள்ளை நிற பையில் தலா பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை, முந்திரி இனிப்பு வகை மற்றும் பிளைன் கேக் என மொத்தமாக சுமார் 7 கிலோவும், (6) ஏ.வி.எம் பட்டு ஜவுளி துணிப்பையில் மாதுளை, ஆப்பிள் மற்றும் கேக் என மொத்தமாக 5 பைகளில் சுமார் 7 ½ கிலோவும், (7) 20 எலுமிச்சை பழங்களும், (8) பரிசு பேக்கிங் செய்யப்பட்ட கேக் வகைகள் -5 பேக் சுமார் 2 ½ கிலோவும், (9) 5 சாக்லெட் பாக்கெட்டுகள் சுமார் 2 ½ கிலோவும் இருந்தன. மேற்படி பொருட்கள் அழுகும் தன்மை கொண்டவை என்பதால் திருமதி.விமலா அவர்கள் வசமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவருடைய அறையில் 2021 ஆம் ஆண்டு புதிய நாட்குறிப்புகள் 10 எண்ணிக்கை, சால்வைகள் 5 எண்ணிக்கை மற்றும் 3 டர்க்கி டவல்கள் இருந்தன. அவை வழக்கு நிமித்தம் கைப்பற்றப்படவில்லை. மேலும், இணை ஆணையர் அலுவலக அறைக்குள் இருந்த அலுவலர்களையும் அலுவலகத்திற்கு வெளியே இருந்த அலுவலர்களையும் உள்ளே அழைத்து விசாரித்து சோதனை செய்ய (1) திரு.G. நடராஜன் த/பெ கோவிந்தசாமி, உதவி ஆணையர், துணை ஆணையர் அலுவலகம், மாநில வரி அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.12,500/- இருந்தது, (2) திரு. S. பாலசுந்தர் த/பெ சீனிவாசன், உதவி ஆணையர் /

நேர்முக உதவியாளர், இணை ஆணையர் (மாநில வரி அலுவலகம்) வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.3,700/- இருந்தது, (3) திரு. P. தனபாலன், த/பெ. பெருமாள், உதவி ஆணையர், மாநில வரி அலுவலகம், ஆம்பூர், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.2,700/- இருந்தது, (4) திரு. A. ஸ்ரீசாய்முருகன் த/பெ அப்பாசாமி, மாநில வரி அலுவலர், குடியாத்தம் மேற்கு, மாநில வரி அலுவலகம், வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.5,200/- இருந்தது, (5) திரு. J. சரவணன் த/பெ ஜெயராமன், துணை மாநில வரி அலுவலர், மாநில வரி அலுவலகம், குடியாத்தம் கிழக்கு, வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.1,150/- இருந்தது (6) திரு. S. செந்தில் த/பெ சிவராஜ், மாநில வரி அலுவலர், மாநில வரி அலுவலகம், குடியாத்தம் கிழக்கு, வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.4,600/- இருந்தது (7) திரு. R. காந்தி த/பெ. ராமநாதன், மாநில வரி அலுவலர், மாநில வரி அலுவலகம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.3,550/- (8) திரு. D. பாலசுப்பிரமணியம் த/பெ. தண்டபாணி, மாநில வரி அலுவலர், மாநில வரி அலுவலகம், வாணியம்பாடி, வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.2,800/- இருந்தது (9) திரு. S. இங்கரன், த/பெ. சுப்பிரமணியம், மாநில வரி அலுவலர், மாநில வரி அலுவலகம், அரக்கோணம், வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.9,500/- இருந்தது (10) திரு. N. ரவி, த/பெ. நாராயணசாமி, மேலாளர்/மாநில வரி அலுவலர், துணை ஆணையர் (மாநில வரி) அலுவலகம், ராணிப்பேட்டை என்பவர் வசம் ரூ.5,600/- இருந்தது (11) திருமதி. S. விஜயா, க/பெ அசோகன், துணை மாநில வரி அலுவலர், மாநில வரி அலுவலகம், ஆற்காடு, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.5,000/- இருந்தது (12) திருமதி. S. கலைவாணி, க/பெ. கோவிந்தராஜ், உதவி ஆணையர், வாணியம்பாடி வரிவிதிப்பு சரகம், மாநில வரி அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.5,500/- இருந்தது (13) திருமதி. G. நந்தினி, க/பெ. ஸ்ரீதரன், உதவி ஆணையர், மாநில வரிஅலுவலகம், திருவண்ணாமலை- I, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.6,300/- இருந்தது (14) திருமதி. B. விஜயா,க/பெ. மணிகண்டன், மாநில வரி அலுவலர், மாநில வரிஅலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம – II என்பவர் வசம் ரூ.3,000/- இருந்தது (15) திருமதி. T.R. கலைவாணி, க/பெ சுந்தர ராஜன், துணை மாநில வரி அலுவலர், திருவண்ணாமலை – I, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம்ரூ.6,000/- இருந்தது (16) திருமதி. S. பாக்கியலட்சுமி, க/பெ. ஸ்ரீனிவாசன், மாநில வரி அலுவலர், மாநில வரி அலுவலகம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.4,500/-இருந்தது (17) செல்வி. M. சுதா, த/பெ. மணி, துணை மாநில வரி அலுவலர், மாநில வரிஅலுவலகம், குடியாத்தம் மேற்கு, வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.3,500/- இருந்தது (18) திருமதி.V. புஷ்பா, க/பெ சிற்றரசு, உதவி ஆணையர், திருவண்ணாமலை – II, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.13,500/- இருந்தது (19) திரு.V. ஆனந்தன், த/பெ வேலாயுதம், துணை மாநில வரி அலுவலர், துணை ஆணையர் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம். மாற்றுப்பணி மாநில வரி அலுவலகம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.1,480/- இருந்தது (20) திரு.G.பார்த்தசாரதி, த/பெ கோபால், துணை மாநில வரி

அலுவலர், மாநில வரி அலுவலகம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.7,900/- இருந்தது (21) திரு.S. பரீதர், த/பெ சண்முகம், துணை மாநில வரி அலுவலர், மாநில வரிஅலுவலகம், திருவண்ணாமலை-I என்பவர் வசம் ரூ.1,300/- இருந்தது (22) திரு.V. தயாளன், த/பெ. வைத்தியலிங்கம், எண்.1, பாரதிதாசன் சாலை, திருவள்ளுவர் நகர், வேலூர். (திரு.பழனி, Auditor, Vellore City Center, என்பவரிடம் வேலை செய்பவர்) என்பவர் வசம் ரூ.17,500/- இருந்தது (23) திரு. K. சங்கர், த/பெ. கண்ணன், எண்.1, சுந்தரேசர் கோயில் தெரு, கொசப்பேட்டை, வேலூர் (திரு. சங்கர், Auditor, மூங்கில் மண்டி, வேலூர் என்பவரிடம் வேலை செய்பவர் என்பவர் வசம் ரூ.3,000/- இருந்தது (24) திரு. G. நரேன்குமார் த/பெ. கோவிந்தன், ஓட்டுநர், எண்.19பி, சாமிக்கண்ணு தெரு, தேவணாம்பட்டி, கடலூர் மாவட்டம். (Driver to State Tax Officer, Arakkonam) என்பவர் வசம் ரூ.9,500/- இருந்தது, மேற்படி நபர்களை தனித்தனியே சோதனை செய்ய அவர்கள் வசம் இருந்த தொகைக்கான விளக்கத்தையோ அத்தொகை எவ்வளவு உள்ளது என்பது குறித்தோ தெரிவிக்காமல் தக்க முகாந்திரம் மற்றும் விளக்கம் கூறாத காரணத்தால் அவர்கள் வசம் இருந்த தொகை மொத்த பணம் ரூ.1,39,280/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் (1) திரு.P.சுரேஷ்குமார் த/பெ பிச்சாண்டி, எண்: 23, சின்னதம்பி தெரு, வேலப்பாடி, வேலூர் (தனி நபர்) என்பவர் வசம் ரூ.4,200/-இருந்தது (2) திரு.K.ஆனந்தன் த/பெ கோதண்டராமன், எண்: 24, பிள்ளையார் கோயில் தெரு, சேண்பாக்கம், வேலூர்.(Texco – Security) என்பவர் வசம் ரூ.3,000/-இருந்தது (3) திரு.முருகன் த/பெ முனுசாமி, அலுவலக உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம் (மாநில வரி), வேலூர் என்பவர் வசம் ரூ.990/- இருந்தது (4) திரு.பாரதிதாசன் த/பெ தினகரன், அலுவலக உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம் (மாநில வரி), வேலூர் என்பவர் வசம் ரூ.800/- இருந்தது (5) திரு.சரவணன் த/பெ மூர்த்தி, உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம் (மாநில வரி), வேலூர் என்பவர் வசம் ரூ.1,500/- இருந்தது (6) திருமதி.R.அம்சவேனி க/பெ அசோக்குமார், துணை மாநில வரி அலுவலர், ராணிப்பேட்டை சிப்காட், வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.1,000/- இருந்தது (7) திருமதி.நீலாம்பிகை க/பெ கன்னியப்பன், துணை மாநில வரி அலுவலர், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.1,700/- இருந்தது (8) திரு.பூங்காவனம் த/பெ முருகேசன், துணை மாநில வரி அலுவலர், திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் ரூ.730/- இருந்தது (9) திரு. S. முகமது அர்ஷத், த/பெ. சாகுல் அமீது, துணை ஆணையர், வேலூர் (பொறுப்பு) திருவண்ணாமலை என்பவர் வசம் ரூ.500/- இருந்தது, மேற்சொன்ன நபர்கள் தக்க முகாந்திரம் கூறிய காரணத்தால் அவர்களிடம் இருந்த தொகை திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் திருமதி.விமலா, இணை ஆணையர் அவர்களின் Hand Bag–ஐ சோதனை செய்ய அதில் பணம் ரூ.1,800/- இருந்தது. அப்பணம் குறித்து திருமதி.விமலா, இணை ஆணையர் அவர்களிடம் விசாரிக்க அவர் அப்பணத்திற்கான தக்க முகாந்திரம் தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அலுவலக அறையை வழக்கு நிமித்தம் சோதனை செய்ய இணை ஆணையர் அவர்களின் மேஜையில் இருந்த இழுவறைகள்,

பீரோ மற்றும் கணினி வைக்கும் டேபிள் ஆகியவற்றை சோதனை செய்ய அவற்றில் வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களோ அல்லது பணமோ ஏதும் இல்லை. மேலும் அலுவலகத்தின் வடமேற்கு முலையில் போடப்பட்டிருந்த டேபிளுக்கு கீழே வெள்ளை நிற அலுவலக கவர் தனியாக ஒன்று காணப்பட்டது. அந்த கவரை எடுத்து பார்க்க அதில் பணம் ரூ.10,720/- காணப்பட்டது. அது குறித்து இணை ஆணையர் திருமதி.விமலா மற்றும் அந்த அறையில் இருந்தவர்களிடம் விசாரிக்க அவர்கள் அனைவரும் பதில் ஏதும் கூறாமல் மௌனமாகவே இருந்தனர். யாரும் உரிமை கோராத அத்தொகை ரூ.10,720/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. திருமதி.விமலா, இணை ஆணையர் அவர்களிடம் 29.12.2020 அன்று நடைபெற்ற பயிற்சி குறித்தும் அதில் கலந்து கொண்டவர்களின் விவரம் குறித்து கேட்க மேற்படி பயிற்சியானது ஆணையாளர், வணிக வரி, எழிலகம், சென்னை அவர்களின் உத்தரவுபடி Quarterly Return Monthly Payment of Taxes Scheme – சம்மந்தமாக வரி செலுத்துவோர்க்கு பயிற்சி அளிப்பதன் பொருட்டு உதவி ஆணையாளர், மாநில வரி அலுவலர் மற்றும் துணை மாநில வரி அலுவலர் வேலூர் மற்றும் திருவண்ணாமலையை சேர்ந்தவர்களுக்கு Outreach Programme அன்று 29.12.2020 மதியம் நடைபெற்றதாகவும் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தனியே வருகை பதிவேடு பராமரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மேற்படி இருதுறை கூட்டுசோதனையின் போது (1) Quarterly Return Monthly Payment of Taxes Scheme பயிற்சி குறித்த உத்தரவு கடிதம் Letter No: PP4/GST-15/37/2020, Dated:18.12.2020 (2) QRMP Training சம்மந்தமாக இணை ஆணையர் வேலூர் கோட்டம் அவர்கள் 29.12.2020 மதியம் 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வணிக வரி அலுவலர் பயிற்சி மையம் வேலூரில் நடைபெற உள்ளது சம்மந்தமாக துணை ஆணையர், உதவி ஆணையர்கள் மற்றும் மாநில வரி அலுவலர்களுக்கு மின்னஞ்சல் முலம் தகவல் தெரிவித்தது சம்மந்தமான விவரங்கள் அடங்கிய தாள் இடது மேல்பக்கத்தில் Zimbra என்றும் வலது மேல்பக்கத்தில் jcct.vlr@ctt.tn.gov.in என்றும் அதனை அடுத்த வரிசையில் Training on Querterly Return monthly payment of taxes scheme –re. என்றும் Mon, Dec 28, 2020 12:26 PM என்று அச்சிடப்பட்டுள்ளது (3) QRMP Training என்ற வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 29.12.2020 என்ற நாளிட்ட பயிற்சியில் கலந்து கொண்டவர்களின் வருகை சம்மந்தமாக வரிசை எண், பெயர், பதவி, கையொப்பம் அடங்கிய பயிற்சிக்கு உண்டான வருகை பதிவேடு மற்றும் (4) இணை ஆணையர், நுண்ணறிவு, மாநில வரி, வேலூர் கோட்ட அலுவலக வருகை பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்படி இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின் போது இணை ஆணையர்(நுண்ணறிவு), மாநில வரி, வேலூர் கோட்ட அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள் மற்றும் தனி நபர்களிடம் இருந்து தக்க முகாந்திரம், விளக்கம், உரிமை கோராத மற்றும் கணக்கு காட்ட இயலாத வகையில் எதிர்வரும் 2021 புத்தாண்டை முன்னிட்டு இணை ஆணையர் திருமதி.விமலா அவர்களுக்கு பண பரிசினை லஞ்சமாக கொடுக்க எத்தனித்து தத்தமது வசம் வைத்திருந்த பணம் ரூ.1,50,000/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 30.12.2020 அன்று 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர் கூட்டு சோதனை செயல்முறை தயார் செய்யப்பட்டது. அதன் நகல் திருமதி.விமலா, இணை ஆணையர், மாநில வரி அவர்களுக்கு வழங்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, வேலூர் கோட்ட அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள் மற்றும் தனி நபர்களிடம் இருந்து தக்க முகாந்திரம் கூற இயலாத உரிமை கோராத மற்றும் கணக்கு காட்ட இயலாத வகையில் எதிர்வரும் 2021 புத்தாண்டை முன்னிட்டு இணை ஆணையர் திருமதி.விமலா அவர்களுக்கு பண பரிசினை லஞ்சமாக கொடுக்க எத்தனித்து தத்தமது வசம் வைத்திருந்த பணம் ரூ.1,50,000/-, 4 ஆவணங்கள்/ பதிவேடுகள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனை செயல்முறை ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து பண பரிசு மற்றும் பரிசு பொருட்களை எதிர்வரும் 2021 புத்தாண்டை முன்னிட்டு லஞ்சமாக பெற்ற மற்றும் பெற எத்தனித்த திருமதி.B.விமலா, இணை ஆணையர் (நுண்ணறிவு), மாநில வரி, வேலூர் முழு கூடுதல் பொறுப்பு மாநில வரி, வேலூர் கோட்டம் என்பவர் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒம்/- XXXXXXX 30.12.2020 S. ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்.

Sir,

Received the complaint on 30/12/2020 at 04.30 hrs and registered a case in Vellore Vigilance and Anti Corruption Cr.No.23/2020 u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C Sd/-XXXXXX 30/12/2020, DSP/V&AC/Vellore.

The FIR in original along with the complaint, Joint Surprise Check Proceedings in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and other copies to the officers concerned.

30/12/2020

HEMACHANDRA. K.S.,
DSP V&AC,
VELLORE